***கவனிக்க.-*** *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்தின் நீதாசன வலயங்களுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2379 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05

*2379 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 474 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 475 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

473 - B82557 - 5,403(2024/04)

# ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

## கௌரவ ஆளுநர்கள் மூலம் வழங்கப்படும் நியமனங்கள் - தென் மாகாணம்

தென் மாகாண கௌரவ ஆளுநர்கள் மூலம் வழங்கப்படும் நியமனங்கள்

தென் மாகாண சபையின் கீழ்க் காணும் பதவிகளுக்காக கீழே பெயர் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள், குறிப்பிடப்பட்ட திகதிகளில் என் மூலம் தென் மாகாணத்தின் கீழுள்ள பதிவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

கலாநிதி டபிள்யூ. டபிள்யூ. கமகே,
தென் மாகாண ஆளுநர்.

தென் மாகாண ஆளுநர் செயலாளர் அலுவலகம்,
கீழ் டிக்ஷன் வீதி,
காலி,
*2024, மாச்சு 26.*

| இல. | உத்தியோகத்தரின் பெயர் | நியமிக்கப்பட்ட பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 1 | திருமதி சீ. பீ. அபயதீர, இலங்கை பொறியியலாளர் சேவை (முதலாம் தரம்) | துணைப் பிரதான செயலாளர், (பொறியியலாளர் சேவை) - பதில் கடமை துணைப் பிரதான செயலாளர், (பொறியியலாளர் சேவை) - அலுவலகம், கோட்டை, காலி. | 2024.01.16 |
| 2 | திரு. என். எம். ஆனந்த அமரதேவ, இலங்கை கணக்காளர் சேவை (விஷேட தரம்) | துணைப் பிரதான செயலாளர், (நிதி நிர்வாகம்), பிரதான செயலாளர் அலுவலகம், தென் மாகாணம். | 2024.01.31 |
| 3 | திருமதி திலேகா குடாச்சி, இலங்கை பரிபாலன சேவை (முதலாம் தரம்) | துணைப் பிரதான செயலாளர், (பணியாளர்கள் மற்றும் பயிற்சி) - பதில் கடமை பிரதான செயலாளர் அலுவலகம், தென் மாகாணம். | 2024.02.01 |
| 4 | திரு. கே. யு. சந்திரலால், இலங்கை பரிபாலன சேவை (விஷேட தரம்) | ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் செயலாளர் அலுவலகம் தென் மாகாணம். | 2024.03.16 |
| 5 | திரு. ரணில் விக்கிரமசேகர, இலங்கை பரிபாலன சேவை (முதலாம் தரம்) | துணைப் பிரதான செயலாளர், (நிர்வாகம்) - பதில் கடமை பிரதான செயலாளர் அலுவலகம், தென் மாகாணம். | 2024.03.16 |

*04 - 46*

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை

சப்பிரகமுவ மாகாண சபையின் மதிப்புக்குரிய ஆளுநரின் அறிவிப்பு

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 உற்பிரிவுகளுடன் வாசிக்க வேண்டிய (267 ஆவது அதிகாரம்) வினோத வரி கட்டளைச் சட்டம் 2 ஆவது உற்பிரிவின் (1) ஆவது உப பிரிவில் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் படி பலாங்கொடை நகர சபையின் செயளாலர் மற்றும் அதிகார செயற்பாடுகளை நடைமுறைபடுத்தும் அதிகாரியாக கொள்கை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் குழுவின் பரிந்துறையின் படி தீர்மானம் செய்யப்பட்ட கீழ் காணப்படும் தீரமானம் அதன் உற்பிரிவு (2) ஆவது உபபிரிவு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி சப்பிரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக ஆகிய என்னால் அனுமதி வழங்கபட்டதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

நவீன் திஸாநாயக,
சப்பிரகமுவ மாகாணசபையின் ஆளுநர்.

சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,
2024, பெப்புருவரி 20.

**தீர்மானம்**

பலாங்கொடை நகர சபையின் செயளாலர் மற்றும் அதிகார செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாக தீர்மான புத்தகம் 2023/09/27 ஆந் திகதிய 2023/09/27/02 ஆம் இலக்க தீர்மானம்.

பலாங்கொடை நகர சபை செயளாலர் மற்றும் அதிகார செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தும் அதிகாரி என்ற அடிப்படையில் 2023/09/27 ஆந் திகதிய கொள்கை மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு உதவியாக குழுவின் பரிந்துறையின் படி தீர்மான இல. 2023/09/27/02 இன் கீழ் பலாங்கொடை நகர சபையில் நடைபெறும் “அதன் கட்டளை சட்டத்தில் கூறப்பட்டுள்ள சில வினோத நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு செலுத்தப்படும் கட்டணத்தில் 10% (நூ ற்றுக்கு பத்து விகிதம்) க்கு சமமான வரி அறவிட வேண்டும் என தீர்மானிக்கிறேன்.

04-25

---

### சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை

சப்பிரகமுவ மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்கள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எம்பிலிபிட்டிய நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை, மேற்கூறிய பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

நவீன் திஸாநாயக்க,
சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர்.

சப்பிரகமுவ மாகாண சபை,
2024, மார்ச் 05.

**தீர்மானம்**

*2023.01.09 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின்போது கௌரவ தவிசாளர் திரு. எஸ். பீ. தினேஷ் மதுசன்க அவர்களால் 4.2 இலக்கத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட பிரேரணை, கௌரவ நகர சபை உறுப்பினர் திரு ஜே. நிஹால் விஜேசிங்ஹ அவர்களால் ஆமோதிக்கப்பட்ட பின்பு 18 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் அந்த பிரேரணை ஏகமனதாக சபையில் அங்கீகரிக்கப்பட்டது.*

*"1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 267) பிரகாரம் களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எம்பிலிபிட்டிய நகர சபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நடத்தப்படுகின்ற, மேற்கூறிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு களியாட்ட விவகாரத்திற்கு உட்பிரவேசிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணமொன்றின் 10% (நூற்றுக்குப் பத்து) வீதத்திற்குச் சமனான வரிப் பணத்தொகையொன்றை விதித்து அறவிட வேண்டுமெனவும், இப் பிரேரணை அங்கீகரித்தலை வர்த்தமானியில் பிரசுரித்த மாதத்திற்குப் பின்பு வரும் மாதத்தின் முதலாம் திகதி தொடக்கம் செயற்பட வேண்டுமெனவும் பிரேரிக்கப்பட்டது."*

*04-26*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2024**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2024 |
| | | புதன் | 10.04.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.03.2024 |
| | | வெள்ளி | 19.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2024 |
| | | வெள்ளி | 26.04.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 10.04.2024 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2024 |
| | | வெள்ளி | 10.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2024 |
| | | வெள்ளி | 17.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2024 |
| | | புதன் | 22.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2024 |
| | | வெள்ளி | 31.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2024 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 22.05.2024 |
| | | வெள்ளி | 14.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2024 |
| | | வியாழன் | 20.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2024 |
| | | வெள்ளி | 28.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.